www.Padasalai.Net www.TrbTnpsc.com

Tsi11Com

தென்காசி மாவட்டம்
முதல் திருப்புதல் தேர்வு - 2024

11417

-----

வகுப்பு 11

கால அளவு: 3.00 மணிநேரம் **வணிகவியல்** மதிப்பெண்கள்: 90

பகுதி-I

**I. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும். 20×1=20**

1) வியாபாரம் மற்றும் வணிகம் ............. பேரரசில் பொதுவானவையாக இருந்தது.
அ) பல்லவர் ஆ) சோழர் இ) பாண்டியர் ஈ) சேரர்

2) பின்வருவனவற்றுள் எது வியாபார நடவடிக்கையின் சிறப்பியல்புகள் இல்லை?
அ) பொருட்கள் மற்றும் சேவையை உருவாக்குதல்
ஆ) இடர் ஏற்றல்
இ) பொருள் மற்றும் சேவை பரிமாற்றம் (அ) விற்பனை
ஈ) சம்பளம் கூலி

3) இரும்பிலிருந்து தாதுக்களைப் பிரித்தெடுக்கும் தொழில்சாலை என்பது
அ) கட்டுமானத் தொழில்கள் ஆ) தயாரிப்புத் தொழில்கள்
இ) பிரித்தெடுக்கும் உற்பத்தித் தொழில்கள் ஈ) மரபுசார் உற்பத்தித் தொழில்கள்

4) தனியாள் வணிகத்தின் மிகப்பெரிய குறைபாடு
அ) வரையறுப் பொறுப்பு ஆ) வரையறாப் பொறுப்பு
இ) அமைப்பது எளிது ஈ) விரைவான முடிவு

5) இந்து கூட்டுக் குடும்பத் தொழிலில் உறுப்பினர்களை எவ்வாறு அழைப்பாய்?
அ) கர்த்தா ஆ) கூட்டுவாரிசுதாரர்
இ) தலைமுறை ஈ) கூட்டாளிகள்

6) நிறுமத்தின் இயக்குநரை கீழ்கண்டவற்றுள் யார் தேர்ந்தெடுக்கிறார்கள்?
அ) கடனீந்தோர் ஆ) கடனாளர்
இ) கடனீட்டுபத்திரதாரர் ஈ) பங்குதாரர்கள்

7) நுகர்வோர் கூட்டுறவு ............. முதன் முதலாக வெற்றி பெற்றது.
அ) இங்கிலாந்து ஆ) அமெரிக்கா இ) சுவிஸ் ஈ) இந்தியா

8) பன்னாட்டு நிறுமங்கள் பின்வருவனவற்றுள் யாரால் கட்டுப்படுத்தப்படுகின்றன.
அ) கிளைகள் அ) துணை நிறுமங்கள்
இ) தலைமையகம் ஈ) இணை நிறுமங்கள்

9) பொதுத்துறை நிறுவனத்தின் பழமையான அமைப்பு
அ) பொதுத்துறை நிறுவனம் ஆ) துறைவாரி அமைப்பு
இ) பன்னாட்டு நிறுவனம் ஈ) சட்டமுறை நிறுவனம்

10) இந்திய ரிசர்வ் வங்கி தனது பணிகளை தொடங்கிய ஆண்டு
அ) 1936 ஆ) 1935 இ) 1934 ஈ) 1933

11) உள்ளூர் பகுதி வங்கிகள் ஊக்குவித்து வருவது
அ) கிராம சேமிப்பு ஆ) வணிக சேமிப்பு
இ) தொழில்துறை வளர்ச்சி ஈ) விவசாய வளர்ச்சி

12) RTGS மூலம் குறைந்தபட்சம் எவ்வளவு பணம் பரிமாற்றம் செய்ய முடியும்?
அ) எவ்வளவு தொகை வேண்டுமானாலும் ஆ) 50000
இ) 2 லட்சம் ஈ) 5 லட்சம்

13) பண்டக காப்பகம் ............ மையமாக பொருட்களை வைத்திருக்கிறது.
அ) சந்தையிடுதல் ஆ) வரிசைப்படுத்துதல்
இ) வழங்கல் ஈ) விற்பனை செய்தல்

14) வானவழி அனுப்பீட்டு ரசீது எத்தனை அசல் பாகங்களில் தயாரிக்கப்படுகிறது.
அ) ஒன்று ஆ)இரண்டு இ) மூன்று ஈ) நான்கு

15) காப்பீட்டின் அடிப்படைக் கோட்பாடு .......... ஆகும்.
அ) மிக்க நம்பிக்கை ஆ) கூட்டுறவு
இ) பகர உரிமை ஈ) அண்மைக் காரணம்

16) பெயர்ச்சியலின் முக்கிய நன்மை
அ) உற்பத்தி மேம்பாடு ஆ) செலவுகளை குறைத்தல்
இ) இலாபம் ஈட்டுதல் ஈ) பண்டக காப்பு

17) சமூகம் பொறுப்புணர்வு வணிகத்தில் பண்டங்களை வழங்குகிறது.
அ) அதிகவிலை ஆ) குறைந்த விலை
இ) நியாயமான விலை ஈ) மிதமான விலை

18) செயல்படாத ஒரு ஒப்பந்தம் சட்ட பிரிவு 56-இன் கீழ்
அ) தவிர்க்கக்கூடி ஆ) செல்லாத
இ) செல்லக்கூடியது ஈ) நிறைவேற்ற முடியாதது

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com


19) வருமானம்ஈட்டப்பட்ட ஆண்டு என்பது
அ) கணக்கீட்டு ஆண்டு ஆ) முந்தைய ஆண்டு
இ) ஒளி ஆண்டு ஈ) நாட்காட்டி ஆண்டு

20) சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு முறை நடைமுறைப்படுத்தப்பட்ட நாள்
அ) ஏப்ரல் 1, 2017 ஆ) சனவரி 1, 2017 இ) சூலை 1, 2017 ஈ) மார்ச் 1, 2017

## பகுதி-II

**எவையேனும் ஏழு வினாவிற்கு விடையளிக்கவும்.** **7×2=14**
**வினா எண் 30 கட்டாய வினா**

21) அல்லங்காடி என்றால் என்ன?
22) உற்பத்தி தொழில் என்றால் என்ன?
23) உறங்கும் கூட்டாளி என்பவர் யார்?
24) கூட்டுறவு வரையறு.
25) துறைவாரி அமைப்புகளுக்கு இரண்டு உதாரணம் தருக.
26) வணிக வங்கிகளின் பொருள் தருக.
27) பண்டகக் காப்புகளின் இரண்டு பணிகள் குறிப்பிடுக.
28) போக்குவரத்து மூலம் வழங்கப்படும் ஏதேனும் இரண்டு சேவைகளைப் பற்றிக் குறிப்பிடுக.
29) தடையற்ற நிறுவனம் என்றால் என்ன?
30) சரக்கு மற்றும் சேவை வரி என்றால் என்ன?

## பகுதி-III

**எவையேனும் ஏழு வினாவிற்கு விடையளிக்கவும்.** **7×3=21**
**வினா எண் 40 கட்டாய வினா**

31) மனித செயல்பாடுகள் என்றால் என்ன?
32) வரையறா பொறுப்பு என்றால் என்ன?
33) அயல்நாட்டு நிறுமம் என்றால் என்ன?
34) இந்தியப் பன்னாட்டு நிறுமங்கள் ஏதேனும் மூன்றைக் குறிப்பிடுக.
35) இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகள் யாவை?
36) உண்மை நேர மொத்த தீர்வக அமைப்பு பற்றி (RTGs) ஒரு குறிப்பு வரைக.
37) கப்பல் தலைவர் ரசீது என்றால் என்ன?
38) குறிப்பு வரைக. அ) நேரடி வரி ஆ) மறைமுக வரி
39) ஒப்பந்தத்தை யார் நிறைவேற்றலாம்.
40) மருவூர் பாக்கம் மற்றும் பட்டினபாக்கம் சிறு குறிப்பு வரைக.

## பகுதி-IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **7×5=35**

41) அ) வணிகத்தின் பல்வேறு தடைகளைக் கூறுக. (ஏதேனும் 5)
**(அல்லது)**
ஆ) சரக்கு மற்றும் சேவை வரியின் வகைகளை விளக்குக.

42) அ) தொழில், சிறப்புத் தொழில் மற்றும் வேலைவாய்ப்பு - ஓர் ஒப்பீடு செய்க.
**(அல்லது)**
ஆ) சுய உதவிக் குழுக்களின் நோக்கங்களை விவரி.

43) அ) கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடகங்கள் யாவை?
**(அல்லது)**
ஆ) பன்னாட்டு வியாபாரத்தின் பல்வேறு வகைகள் விவரி.

44) அ) அமைப்பு முறையேட்டின் உள்ளடகங்கள் யாவை?
**(அல்லது)**
ஆ) சில்லறை வியாபாரிகளின் பண்புநலன்கள் யாவை?

45) அ) இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு பணிகளை விவரி
**(அல்லது)**
ஆ) தனியாள் வணிகத்தின் நன்மைகள் விவரி.

46) அ) கூட்டுறவு சங்கத்தின் வகைகளை கூறுக.
**(அல்லது)**
ஆ) ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கை இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?

47) அ) காப்பீட்டின் வகைகளை விவரி
**(அல்லது)**
ஆ) உள்நாட்டு வாணிபத்திற்கும் பன்னாட்டு வாணிபத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

- - - - - - -

www.Padasalai.Net
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com